www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

# கலாம் அகாடமி

## திருப்புதல் தேர்வு – I
## தமிழ்

**1. அயோத்திதாசர் "ஆதிவேதம்" என்னும் நூலை எழுத எந்நூலைச் சான்றாககக் கொள்ளவில்லை?**
a. நன்னூல் விளக்கம் b. தொன்னூல் விளக்கம் c. வீரசோழியம் d. மச்சமுனிவர் ஞானம்

**2. தவறான தொடரைக் கண்டுபிடி:**
a. ஆயிரம் யானைகளை வென்றவனைப் பாடுவது – பரணி
b. மூவேந்தர்களைப் பற்றிய செய்திகள் முத்தொள்ளாயிரம்
c. பதினெட்டு உறுப்புகளால் ஆனது – கலம்பகம்
d. ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பப் பாடுவது – அந்தாதி

**3. அணியைக் கட்டுக:**
**"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம்தளிர்த் தற்று"**
a. ஏகதேச உருவ அணி b. எடுத்துக்காட்டு உவமை அணி
c. வேற்றுமை அணி d. இல்பொருள் உவமை அணி

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**4. 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டப்பட்டவர் யார்?**
a. பாரதிதாசன் b. கண்ணதாசன் c. பாரதியார் d. வாணிதாசன்

**5. உரிய விடையைத் தேர்க:**
**அகராதி என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ளநூல்**
a. திருமந்திரம் b. சதுரகராதி c. தமிழ் அகராதி d. தமிழ் - தமிழ் அகர முதலி

**6. விடை தேர்க:**
**பெண்களுக்குக் கல்வியும், சொத்துரிமையும் தரப்பட வேண்டும் என்று மேடைகளில் பேசியும், இதழ்களில் எழுதியும் வந்தவர்**
a. பெரியார் b. பாரதியார் c. பாதிதாசன் d. வாணிதாசன்

**7. "எக்கோளில் கந்தகம் இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது?**
a. சனி b. புதன் c. வியாழன் d. வெள்ளி

**8. சரியான விடையைத் தேர்க:**
**தற்காலத்தில் மதுரை என அழைக்கப்படும் ஊர் பழங்காலக் கல்வெட்டுகளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**
a. மதுர b. மதுரா c. மதிரை d. மதுரை

**9. வாயில் ஊறேு நுகர்வே வேட்கை**
**பற்றேபவமே தோற்றம் வினைப்பயன் - இப்பாடலடியில் like எனும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்**


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

a. பற்று b. வேட்கை c. நுகர்வு d. தோற்றம்

**10. வள்ளலார் பதிப்பித்த நூல் எது?**

a. திருச்சதகம் b. அறப்பளிகர சதகம் c. தொண்டமண்டல சதகம் d. கும்ரேச சதகம்

**11. பொருந்தா இணையைக் கண்டறிக:**

| கவிதை வரி | கவிஞர் |
|---|---|
| a. 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது' | - நாமக்கல் கவிஞர் |
| b. 'நமக்குத் தொழில் கவிதை' | - பாரதியார் |
| c. 'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே' | - பாரதிதாசன் |
| d. 'வெறுங்கை என்பது மூடத்தனம் விரல்கள் பத்தும் மூலதனம் | - கவிமணி |

**12. "______ கருமமே கண்ணாயி னார்" – என்ற அடியை ஈற்றடியாகக் கொண்ட நீதி நூலின் பெயர்**

a. நாலடியார் b. மூதுரை c. நீதிநெறி விளக்கம் d. ஆசாரக்கோவை

**13. நீடுழி வாழ்க – என்பது**

a. விழைவுத் தொடர் b. வினாத்தொடர் c. உணர்ச்சித் தொடர் d. செய்தித் தொடர்

**14. கீழ்காண்பனவற்றுள் எத்தொடர் பிறமொழிச் சொல் கலவாதது?**

a. ஆசிரியர் அனுமதி பெற்று வேலன விடுப்பு எடுத்தான்

b. ஒப்பனை செய்து கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி

c. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

d. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது

**15. "இது செய்வாயா"? என்பதற்கு நீயே செய் என்று மொழியும் விடை:**

a. உற்றது உரைத்தல் b. உறுவது கூறல் c. ஏவல் விடை d. வினா எதிர் வினாதல் விடை

**16. ஐந்திணைகளில் எத்திணையிலும் இடம் பெறாத சிறு பொழுது எது?**

a. யாமம் b. மாலை c. காலை d. ஏற்பாடு

**17. உலகின் எட்டாவது அதிசயம் என்று பாராட்டப்படுபவர்**

a. ஆங்சாங்சுகி b. மேரிகியூர் c. கெலன் கெல்லர் d. சட்கோ சசாகி

**18. "தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ள செய்திகளைச் சித்திரகுப்தனைப் போல் ஒன்று விடாமல் குறித்து வைத்துள்ளவர்" என ஆனந்தரங்களைப் பாராட்டியவர்**

a. பரிதிமாற் கலைஞர் b. மறைமலையடிகள் c. வ.வே.சு d. பாவாணர்

**19. சீவகசித்தாமணியின் உட்பிரிவுக்கு என்ன பெயர்?**

a. காதை b. இயல் c. இலம்பகம் d. காண்டம்

**20. "செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
**காணின் கிழக்காம் தலை"**
**இக்குறட்பாவில் அடிக்கோடு இடப்பட்ட சொல்லுக்குச் சரியான ஆங்கிலச் சொல்லைத் தேர்க**

a. FOE b. FOB c. FOG d. FOP


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**21.** **“நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன்” – என்று கூறியவர்**
a. மு. வரதராசன் b. டி.கே. சிதம்பரம் c. திரு.வி. கலியாணசுந்தரம் d. ரா.பி. சேதுப்பிள்ளை

**22.** **காந்தியடிகள் பள்ளிப் பருவத்தில் படித்த நாடக நூல்**
a. சிரவண பிதுர்பத்தி b. மனோன்மணீயம் c. சிலப்பதிகாரம் d. அரிச்சந்திர புராணம்

**23.** **ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே எனப் பாடியவர்**
a. சுந்தரர் b. திருநாவுக்கரசர் c. ஞான சம்பந்தர் d. மாணிக்கவாசகர்

**24.** **அடிகள் தோறும் நாற்சீர்கள் கொண்ட அளவடிகளாக வருவது**
a. நேரிசை ஆசிரியப்பா b. இணைகுறள் ஆசிரியப்பா
c. நிலைமண்டில் ஆசிரியப்பா d. அடிமறிமண்டில் ஆசிரியப்பா

**25.** **உயிர்த்தொடர் குற்றியலுகரத்தைச் சாராதது**
a. வரகு b. வரவு c. கடுகு d. மிளகு

**26.** **ஆண்பாற் கூற்றும் பெண்பாற் கூற்றும் இடம் பெற்ற திணைகள்**
a. வெட்சி, காஞ்சி b. வெட்சி, கரந்தை
c. நொச்சி, உழிஞை d. கைக்கிளை, பெருந்திணை

**27.** **“தென்னம் பொருப்பின் தலைவ வாழி” என்னும் அடியில் தென்னம் பொருப்பு குறிப்பது**
a. குடகு மலை b. பொதிகை மலை c. ஜவ்வாது மலை d. ஆனை மலை

**28.** **‘உச்சிமேற் புலவர் கொள்’ என்ற அடைமொழியால் குறிக்கப்படுபவர்**
www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com
I. தொல்காப்பியர்
II. இவர் காப்பியம் படைத்தவர்
III. இவர் ஒரு உரையாசிரியர்
IV. நச்சினார்க்கினியர்
a. I-ம், II-ம் சரியானவை b. I-ம், III-ம் சரியானவை
c. II, III, IV மூன்று சரி d. III-ம், IV-ம் சரியானவை

**29.** **ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் இணை தருக.**

| **கலை** | **கழை** |
|---|---|
| a. கலைத்தல் | - மரம் |
| b. கவின்கலை | - மூங்கில் |
| c. நீக்குதல் | - கழைக்கூத்து |
| d. ஒப்பனை | - தழைத்தல் |

**30.** **பெயர்ச்சொல்லின் வகையறிக: “இகலவர்”**
a. வினையாலணையும் பெயர் b. குறிப்பு வினையாலணையும் பெயர்
c. காரணச் சிறப்புப் பெயர் d. உவமையாகு பெயர்

**31.** **“The light of Asia” என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்**
a. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை b. நாமக்கல் கவிஞர்
c. உடுமலை நாராயண கவி d. மருதகாசி

**32.** **மலையமான் என்ற மன்னன் மக்களை யானையின் கால் கீழிட்டுக் கொல்ல முற்பட்டபொழுது, தடுத்து நிறுத்திய புலவர்**


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

a. கபிலர் b. கோவூர்க்கிழார் c. மோசிகீரனார் d. ஔவையார்

**33. நாவுக்கரசர் நல்கிய நன்னெறி என்ன?**

a. மகன்மை நெறி b. தொண்டு நெறி c. தோழமை நெறி d. சமத்துவ நெறி

**34. மணிமேகலையின் தோழி**

a. காய சண்டிகை b. நீலி c. ஐயை d. சுதமதி

**35. தேவநேயப் பாவாணர் தமிழன்னைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இறுதியாக சொற்பொழிவு நிகழ்த்திய இடம் எது?**

a. சென்னை b. மதுரை c. கோவை d. தஞ்சை

**36. மேடைப் பேச்சின் கூறுகள் எத்தனை?**

a. 3 b. 4 c. 1 d. 2

**37. கீழுள்ள நூல் பட்டியலில் மாறியிருக்கும் நூல் எது?**

a. ஏலாதி b. திருமந்திரம் c. திருவாசகம் d. திருத்தொண்டத் தொகை

**38. பத்துப்பாட்டிலும், பன்னிரு திருமுறைகளிலும் இடம் பெறுவது**

a. தேவாரம் b. திருவிளையாடற்புராணம் c. திருமுருகாற்றுப்படை d. குறிஞ்சிப்பாட்டு

**39. சந்திப்பிழை இல்லாதத் தொடரைக் கண்டறிக:**

a. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

b. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார் அம்பேத்கர்

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

c. இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர் அம்பேத்கர்

d. சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர்

Kalam ACADEMY SMALL AIM IS A CRIME

**40. பின்வரும் நூல்களுள் மாறுபட்டதை தேர்க:**

a. ஏலாதி b. பழமொழி c. சிறுபஞ்சமூலம் d. திரிகடுகம்

**41. பொருத்துக:**

A. இடுகுறிப் பொதுப்பெயர் — 1. மரங்கொத்தி
B. இடுகுறிப் சிறப்புப் பெயர் — 2. பறவை
C. காரணப் பொதுப்பெயர் — 3. காடு
D. காரணச் சிறப்புப்பெயர் — 4. பனை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 3 | 1 | 4 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| D. | 2 | 1 | 3 | 4 |

**42. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:**

a. மேதி b. எண்கு c. கேழல் d. மஞ்ஞை

**43. சரியான ஈற்றடியைத் தேர்க:**

**"ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்கு**
**_________"**

a. பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து b. பொன்றுந் துணையும் புகழ்

c. தகுதியான் வென்று விடல் d. அறனல்ல செய்யாமை நன்று

**44. பொருத்தமில்லாத் தொடரை கண்றிக:**

a. தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரனார் b. தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர்


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

c. தமிழ்வேல் உமாமகேஸ்வரனார் d. நூலகத் தந்தை அறிஞர் அண்ணா

**45. பொருத்துக**

| பாடலின் தொடக்கம் | பாடிய புலவர் | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|
| A. பொன்னும் துகிரும் மன்னிய | 1. மிளைகிழான் நல்வேட்டனார் | a. | 3 | 2 | 1 | 4 |
| B. கண்வனப்புக் கண்ணோட்டம் | 2. மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் | b. | 4 | 3 | 1 | 2 |
| | | c. | 2 | 1 | 3 | 4 |
| C. அரிகால் மாறிய அங்கண் அகல்வயல் | 3. காரியாசான் | d. | 1 | 4 | 3 | 2 |
| D. தென்கடல் வளாகம் பொதுமையின்றி | 4. கண்ணகனார் | | | | | |

**46. இனத்தில் சேராத ஒன்றைச் சுட்டுக:**
a. வங்கம் b. திமில் c. பௌவம் d. கலம்

**47. ‘திருமுருகாற்றுப்படை’ சைவத் திருமுறைகளில் எத்தனையாவது திருமுறை?**
a. எட்டாம் திருமுறை b. பத்தாம் திருமுறை c. ஐந்தாம் திருமுறை d. பதினோராம் திருமுறை

**48. பதிற்றுப்பத்து நூலில் கிடைக்கப் பெறாதவை**
a. முதற் பத்தும் மூன்றாம் பத்தும் b. ஐந்தாம் பத்தும் பத்தாம் பத்தும்
c. இரண்டாம் பத்தும் எட்டாம் பத்தும் d. முதற் பத்தும் பத்தாம் பத்தும்

**49. கீழ்க்காண்பவர்களுள் அமைச்சராக இருந்து அருந்தமிழ் வளர்த்தவர்**
a. பொய்யாமொழித் தேவர் b. திருத்தக்க தேவர் c. அருண்மொழித் தேவர் d. பாண்டித்துரை தேவர்

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**50. ‘புள்ளுறு புன்கண் தீர்த்தோன்’ – என்ற தொடரில் “தீர்த்தோன்” என்ற சொல் யாரைக் குறிக்கிறது?**
a. சிபிச் சக்கரவர்த்தி b. மனுநீதிச் சோழன் c. கரிகாற் சோழன் d. இராசஇராச சோழன்

Kalam ACADEMY SMALL AIM IS A CRIME

**51. “ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி”
எனக் கூறும் நூலின் பெயர் யாது?**
a கலிங்கத்துப்பரணி b. திராவிடத்துப் பரணி c. பன்னிரு பாட்டியல் d. முத்தொள்ளாயிரம்

**52. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்**
A. மகடூஉ வோடில்லை முந்நீர் வழக்கம் B. வோடில்லை முந்நீர் வழக்கம் மகடூஉ
C. வழக்கம் மகடூஉ வோடில்லை முந்நீர் D. முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை

**53. ஒட்டம் என்பது எவ்வகைப் பெயர்ச் சொல்?**
A. இடம் B. பொருள் C. பண்பு D. தொழில்

**54. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்**
A. உயர்வை உணர்த்தும் உழைப்பு பெருநாள்
B. பெருநாள் உழைப்பின் உயர்வை உயர்த்தும்
C. உணர்த்தும் பெருநாள் உழைப்பின் உயர்வை
D. உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்

**55. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:**
A. தௌலம், சௌனாம்பரம், ஔடதம், கௌரியம்
B. சௌனாம்பரம், கௌரியம், ஔடதம், தௌலம்


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

C. ஔடதம், கௌரியம், சௌனாம்பரம், தௌலம்

D. ஔடதம், கௌரியம், தௌலம், சௌனாம்பரம்

**56. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:**

A. திறம், துருவல், தேறல், தெறுழ் B. தேறல், தெறுழ், துருவல், திறம்

C. துருவல், திறம், தேறல், தெறுழ் D. திறம், துருவல், தெறுழ், தேறல்

**57. 'அறை' என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சம் எழுதுக:**

A. அறைய B. அறைதல் C. அறைந்து D. அறைந்தவன்

**58. பொருத்துக:**

**பட்டியல் Iல் உள்ள தொடரை பட்டியல் IIல் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெ:**

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. காயும் நவிச்சுடர் | 1. அரிச்சுவடி | A. | 3 | 4 | 2 | 1 |
| b. விரிகடல் | 2. வாழும் வீடு | B. | 1 | 2 | 3 | 4 |
| c. கட்டுமரம் | 3. கூரை | C. | 4 | 3 | 2 | 1 |
| d. பின்னல் வலை | 4. பள்ளிக்கூடம் | D. | 2 | 1 | 4 | 3 |

**59. சரியான பொருள் எழுதுக:**

**"அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்**

**அடவிமலை யாறெல்லாம் கடந்து போகி"**

**அடவி பொருள் குறிப்பிடுக**

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

A. மலை B. ஆறு C. காடு D. சமவெளி

Kalam ACADEMY SMALL AIM IS A CRIME

**60. பொருத்துக:**

| நிலம் | பாடியோர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. குறிஞ்சி | 1. பேயனார் | A. | 4 | 1 | 2 | 3 |
| b. முல்லை | 2. ஓரம்போகியார் | B. | 4 | 2 | 1 | 3 |
| c. மருதம் | 3. அம்மூவனார் | C. | 1 | 3 | 2 | 4 |
| d. நெய்தல் | 4. கபிலர் | D. | 1 | 2 | 3 | 4 |

**61. "மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே"**

**மன்னன் வாயில் தெறித்த மணி எது?**

A. முத்து B. பவளம் C. மாணிக்கம் D. கோமேதகம்

**62. ... என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது**

A. சீதக்காதி வள்ளல் B. சடையப்ப வள்ளல் C. அபுல்காசிம் D. சந்திரன் சவர்க்கி

**63. "உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே"**

**இப்பாடல் வரி எந்நூலில் உள்ளது?**

A. தமிழ் மறை B. தமிழ் மூவாயிரம் C. தேவாரம் D. திருவாசகம்

**64. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க:**

**முத்தொள்ளாயிரம் முழுமையாகக் கிடைக்கவில்லை**

**புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக ________**

**பழைய உரைநூல்களில் மேற்கோள்களாக ________**


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

வெண்பாக்கள் கிடைத்துள்ளன.

A. 108, 21 B. 107, 21 C. 108, 22 D. 106, 20

**65.** பட்டியல் ஐல் உள்ள தொடர்களை பட்டியல் ஐஐல் உள்ள அடியவர்களைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடரைக் குறிப்பிடுக:

| தொடர் | அடியவர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. அழுது அடியடைந்த அன்பர் | 1. சுந்தரர் | A. | 2 | 3 | 4 | 1 |
| b. நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் | 2. திருநாவுக்கரசர் | B. | 3 | 4 | 2 | 1 |
| c. என்கடன் பணி செய்து கிடப்பதே | 3. மாணிக்கவாசகர் | C. | 4 | 3 | 2 | 1 |
| d. ஏழிசையால் இசைப்பயனாய் இன்னமுதாய் | 4. திருஞான சம்மந்தர் | D. | 2 | 3 | 1 | 4 |

**66.** பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைத் தேர்க:
வினைத்தொகை

A. பொங்குகடல் B. செய்வினை C. தேன்குடி D. வருபுனல்

**67.** பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக:
உரிச்சொற்றொடர்

A. புன்கண் B. மல்லல் C. நனிகடிது D. தடக்கை

**68.** விடை தேர்க:
"முத்தமிழ்" எனும் சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?

A. வினைத்தொகை B. பண்புத்தொகை C. உவமைத்தொகை D. உம்மைத்தொகை

**69.** பெரிய புராணத்தில் மூத்த திருநாவுக்கரசு வாழைக் குருத்து அரியும் போது பாம்பு தீண்டியது....

A. உள்ளங்காலில் B. உள்ளங் கையில் C. புறங்கையில் D. புறங்காலில்

**70.** பொருத்துக:

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

| சொல் | பொருள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. நாமம் | 1. பன்றி | A. | 4 | 3 | 2 | 1 |
| b. ஓதி | 2. மலை | B. | 1 | 2 | 3 | 4 |
| c. வெற்பு | 3. கூந்தல் | C. | 3 | 4 | 2 | 1 |
| d. கேழல் | 4. பெயர் | D. | 2 | 1 | 4 | 3 |

**71.** பொருத்துக:

| சொல் | பொருள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. மிடிமை | 1. திருமணம் | A. | 1 | 2 | 3 | 4 |
| b. உரவு | 2. வயது | B. | 2 | 1 | 4 | 3 |
| c. வதுவை | 3. வறுமை | C. | 3 | 4 | 1 | 2 |
| d. அகவை | 4. வலிமை | D. | 3 | 4 | 2 | 1 |

**72.** பொருத்துக:

| சொல் | பொருள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சிலை | 1. கவலை | A. | 2 | 1 | 3 | 4 |
| b. பையுள் | 2. வில் | B. | 2 | 1 | 4 | 3 |
| c. பீடு | 3. வெற்றி | C. | 3 | 4 | 1 | 2 |
| d. விறல் | 4. பெருமை | D. | 4 | 3 | 2 | 1 |

**73.** பொருத்துக:

| நூல் | நூலாசிரியர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. மூவருலா | 1. கம்பர் | A. | 2 | 1 | 4 | 3 |
| b. கலிங்கத்துப்பரணி | 2. ஒட்டக்கூத்தர் | B. | 2 | 4 | 1 | 3 |
| c. சிலை எழுபது | 3. புகழேந்தி | C. | 1 | 2 | 3 | 4 |


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| d. நளவெண்பா | 4. செயங்கொண்டார் | D. | 4 | 3 | 2 | 1 |

**74. தொடரும் தொடர்பும்**

| தொடர் | சான்றோர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே | 1. திருமூலர் | A. | 2 | 1 | 4 | 3 |
| b. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே | 2. பாரதிதாசன் | B. | 1 | 2 | 3 | 4 |
| c. தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதேறும் சிலப்பதிகாரம் | 3. திருவள்ளுவர் | C. | 3 | 4 | 2 | 1 |
| d. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் | 4. கவிமணி | D. | 4 | 3 | 1 | 2 |

**75. பொருத்துக:**

| கரு | ஆசிரியர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சமுதாய முன்னேற்றம் | 1. கு.ப. ராஜகோபாலன் | A. | 4 | 3 | 2 | 1 |
| b. குடும்ப வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கூறுவன | 2. ராஜாஜி | B. | 3 | 2 | 1 | 4 |
| c. வலுவான கொள்கைகள் | 3. ரகுநாதன் | C. | 1 | 2 | 3 | 4 |
| d. புரட்சியான கருத்துக்கள் | 4. சுந்தர ராமசாமி | D. | 2 | 1 | 4 | 3 |

**76. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:**
**பல்லவர் காலத்து ஓவியங்கள் அல்லாததைக் கண்டறிக:**

A. மாமல்லபுரம் B. மாமண்டூர் C. தஞ்சைப் பெரிய கோயில் D. காஞ்சி கைலாசநாதர் கோயில்

**77. பொருந்தாத நூலைக் கண்டறிக:**
**புதுமைப்பித்தனால் எழுதப்படாத நூல் எது எனக் கண்டறிக:**

A. சாப விமோசனம் B. முள்ளும் ரோஜாவும் C. பொன்னகரம் D. கல்யாணி

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**78. பொருத்துக:**

| சிற்பம் | காலம் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. கடவுளர்களின் திருவுருவங்கள் | 1. 2 ஆம் நூற்றாண்டு | A. | 1 | 2 | 3 | 4 |
| b. இராமாயண சிவபுராணக் காட்சிகள் | 2. பல்லவர் காலம் | B. | 2 | 4 | 1 | 3 |
| c. கண்ணகி சிலை, கொல்லிப்பாவை | 3. விஜயநகர நாயக்கர் காலம் | C. | 3 | 2 | 1 | 4 |
| d. மனிதர்களின் உடற் கூறுகள் | 4. சோழர்காலம் | D. | 4 | 3 | 2 | 1 |

**79. பிரித்து எழுதுக:**
**நாற்கரணம்**

A. நால் + கரணம் B. நான்கு + கரணம் C. நாற்கு + கரணம் D. நாள் + கரணம்

**80. சந்திப் பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக:**

1. கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
2. கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
3. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது
4. மேடை பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது

A. 1 மற்றும் 3 B. 2 மற்றும் 3 C. 3 மற்றும் 4 D. 1 மற்றும் 4

**81. வழுவற்ற தொடர் எது?**

A. பனை இலையால் கூரை போட்டனர் B. பனை ஓலையால் கூரை வேய்ந்தனர்
C. பனை இலையால் கூரை கட்டினார் D. பனை ஓலையால் கூரை முடுக்கினர்

**82. கீழ்க் காணும் விடைகளில் எது சரியானது?**

A. ஈ - கொடு B. அ – எருது C. கோ – கோபுரம் D. சே – செய்


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**83. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக:**

**கலை** — **களை**

A. கலைத்தல் - களைத்தல்
B. நுண்கலை - மனபாரம்
C. ஆடை - நீக்குதல்
D. சிலை - மகிழ்ச்சி

**84. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**“சோகம் தராதவன் அசோகன்” என்று கூறியவர்**

A. சிற்பி பாலசுப்பிரமணியம் B. சுரதா C. வாணிதாசன் D. பாரதிதாசன்

**85. கண்டறிக:**

**ஆடல் மகளின் ஓவியம் எங்குள்ளது என்பதைக் கண்டறிக:**

A. திருவரங்கம் B. மதுரை C. பனமலை D. காஞ்சி

**86. பொருத்துக:**

| சிறப்புத் தொடர் | நூல்கள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. தமிழ் வேலி | 1. தேவாரம் | A. | 2 | 3 | 1 | 4 |
| b. தமிழ்கெழுகூடல் | 2. திருவாசகம் | B. | 1 | 2 | 3 | 4 |
| c. கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் | 3. பரிபாடல் | C. | 3 | 4 | 1 | 2 |
| d. பண்ணொடு தமிழொப்பாய் | 4. புறநானூறு | D. | 3 | 4 | 2 | 1 |

**87. பொருத்துக:**

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

| சிறப்புப் பெயர்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| a. நாடகத் தலைமையாசிரியர் | 1. அ.பம்மல் சம்பந்த முதலியார் |
| b. தமிழ்நாடகத்தின் தந்தை | 2. ஆ. சங்கரதாஸ் சுவாமிகள் |
| c. தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் | 3. தெ.பொ. கிருஷ்ணசாமிப்புலவர் |
| d. புரட்சியான நாடகங்களை எழுதி சுதந்திர உணர்ச்சியைப் பெருக்கியவர் | 4. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 3 | 2 | 1 | 4 |
| B. | 2 | 1 | 4 | 3 |
| C. | 4 | 3 | 2 | 1 |
| D. | 1 | 2 | 3 | 4 |

**88. தொடரும் - தொடர்பும்**

| தொடர் | சான்றோர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. புரைதீர் நல்லறம் போற்றிக்கேண்பின் | 1. பாரதிதாசன் | A. | 1 | 2 | 3 | 4 |
| b. தமிழ் நாட்டின் இரசூல் கம்சதோவ் | 2. சீத்தலைச் சாத்தனார் | B. | 2 | 1 | 4 | 3 |
| c. என் கடன் பணி செய்து கிடப்பதே | 3. ஔவையார் | C. | 3 | 4 | 2 | 1 |
| d. அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி | 4. திருநாவுக்கரசர் | D. | 4 | 3 | 1 | 2 |

**89. பிரித்தறிதலில் சரியான விடையைத் தேர்க:**

**நீணிலம்**

A. நீண்ட + நிலம் B. நீ + நிலம் C. நீள் + நிலம் D. நீண் + நிலம்

**90. பிரித்தலில் எது சரியானது என அறிக.**

**தீந்தமிழ்**

A. தீ + தமிழ் B. தீமை + தமிழ் C. தீம் + தமிழ் D. தீன் + தமிழ்


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**91.** **நூற்றேழு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்**

A. புறநானூறு   B. நாலடியார்   C. வாயுறை வாழ்த்து   D. கலித்தொகை

**92.** **பொருத்தி தொடரைக் குறிப்பிடுக:**

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. ஓதலில் சிறந்தன் (று) | 1. மெய்ப்பிணி இன்மை | A. | 2 | 3 | 1 | 4 |
| b. வண்மையில் சிறந்தன்று | 2. வாய்மையுடைமை | B. | 3 | 2 | 4 | 1 |
| c. மேதையில் சிறந்தன்று | 3. ஒழுக்கமுடைமை | C. | 1 | 2 | 3 | 4 |
| d. இளமையில் சிறந்தன்று | 4. கற்றது மறவாமை | D. | 4 | 3 | 2 | 1 |

**93.** **இவற்றுள் எது அளவை ஆகுபெயரன்று?**

a. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்   b. இரண்டு லிட்டர் கொடு

c. மூன்று கிலோ அரிசி கொடு   d. ஐந்து மீட்டர் கொடு

**94.** **விடைத்தேர்க:**

I. சிறந்த நூல் எது? அந்நூலின் ஆசிரியர் யார்?

II. அதுவா சிறந்த நூல்? அவரோ இயற்றினார்?

III. எ.யா என்னும் வினாவெழுத்துகள் சொல்லின் முதலில் நின்று வினாப் பொருளைத் தரும்

IV. ஆ,ஓ என்னும் வினாவெழுத்து சொல்லின் ஈற்றில் நின்று வினாப் பொருளைத் தரும்

a. I மற்றும் II தவறு III மற்றும் IV சரி   b. I சரி II தவறு III மற்றும் IV சரி

c. I மற்றும் II சரி III தவறு IV சரி   d. I, II, III, IV அனைத்தும் சரி

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**95. நல்கிய என்னும்** பகுபதத்தின் **இடைநிலை**

a. க்   b. இ   c. இன்   d. இய

**96.** **பொருத்துக:**

| | | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|
| A. எஃகு | 1. செய்யுளிசை யளபெடை | a. | 4 | 3 | 1 | 2 |
| B. கெழீஇ | 2. இன்னிசையளபெடை | b. | 1 | 3 | 2 | 4 |
| C. தொழாஅ அர் | 3. சொல்லிசையளபெடை | c. | 4 | 3 | 2 | 1 |
| D. கெடுப்பதூஉம் | 4. ஒற்றளபெடை | d. | 2 | 3 | 1 | 4 |

**97.** **பொருத்துக:**

| கருத்து | ஆசிரியர் |
|---|---|
| a. புதுக்கவிதையின் மறுபிறப்புக்கு வித்திட்டவர் | 1. சுந்தர ராமசாமி |
| b. புதுக்கவிதை செழுமையுறக் காரணமாக இருந்தவர் | 2. மணி |
| c. புதுக்கவிதை வரலாற்றில் ஒருதுருவ நட்சத்திரம் | 3. அ.ந.பிச்சமூர்த்தி |
| d. யாப்பறிந்து யாப்புடைத்த புதுக்கவிஞர் | 4. சி.சு. செல்லப்பா |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 1 | 3 | 2 |
| B. | 1 | 2 | 3 | 4 |
| C. | 3 | 4 | 1 | 2 |
| D. | 2 | 1 | 4 | 3 |


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

**98.** "துவ்வா விடமும் அமுதாகும்"
**அடிகோடிட்ட சொல்லின் இலக்கணம் யாது?**
A. குறிப்புப் பெயரெச்சம்
B. குறிப்பு வினையெச்சம்
C. எதிர்மறைப் பெயரெச்சம்
D. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**99. 'Whats App' என்ற சொல் பார்க்கவும் கேட்கவும் படிக்கவுமான மின்னஞ்சல் குறுஞ்செய்தி வசதியை முனைவர் ம. இராஜேந்திரன்.................. என மொழி பெயர்த்துள்ளார்.**
(A) தூதுலாவி (B) கட்செவி அஞ்சல் (C) எண்ண நகலி (D) தூது செயலி

**100. "அன்னபூரணி" எனும் புதின ஆசிரியர்**
(A) ஜெயகாந்தன் (B) அகிலன் (C) வைரமுத்து (D) க. சச்சிதானந்தன்

## *** வெற்றி பெற நல்வாழ்த்துக்கள் ***

| HEAD OFFICE | BRANCH OFFICE |
|---|---|
| KALAM IAS ACADEMY,<br>NO.S.186, PAPER MILLS ROAD, PERAVALLUR,<br>NEAR AGARAM JUNCTION,<br>THIRU.VEE.KA.NAGAR,<br>PERAMBUR, CHENNAI – 600 082.<br>CALL : 9500142441 / 8608615241 / 044-49588346<br>Website : www.kalamtrainingacademy.com | KALAM IAS ACADEMY,<br>3rd STREET, SENTHIL NAGAR, LOGANATHAN NAGAR, PADMANABHA NAGAR, 100 FEED ROAD, VADAPALANI, CHENNAI – 600 094<br>NEXT TO MMDA BUS STOP<br>CLOSE TO ARUMBAKKAM METRO STATION<br>CALL : 9500142441 / 8608615241 / 044-49588346<br>Website : www.kalamtrainingacademy.com |

www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com

ANSWER KEYS VISIT

www.kalamtrainingacademy.com


www.kalvikural.com www.kalvikural.com www.kalvikural.com